**பாணந்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முத்திரைக் கட்டண சிட்டையிடல் ரூபா 12,816,489 ஆக இருந்த போதும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 15,598,459 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக முத்திரைக் கட்டணம் மற்றும் திரண்ட நிதியக் கணக்குகளின் மீதிகள் ரூபா 2,781,970 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2015, 2016 ஆம் ஆண்டுகளில் முத்திரைக் கட்டண சிட்டையிடல்களை விட அதிகமாக கிடைக்கப் பெற்றிருந்தமையால் அந்த தொகையும் 2019 இன் சிட்டையிடலுடன் கடன்பட்டோராக கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டில் நிறைவேற்ற முடியாதிருந்த 17 செயற்திட்டங்களுக்காக ரூபா 14,782,862 தொகையான கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை மற்றும் வேலை ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களுக் காக கடன்கொடுத்தோர் ஒதுக்கம் | உடன்படிக்கை கையொப்பமிட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடையாத செயற்திட்டங்களுக்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ள முடியாது. | |
| (iii) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக கிடைத்த ரூபா 6,221,373 தொகை மோட்டார் வாகன கணக்கிலும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்பு கணக்கிலும் குறிப்பிடப்பட்டிருந்த போதும், ஆண்டில் ரூபா 5,800,000 நன்கொடை மாத்திரம் கிடைத்திருந்தமையினால் அந்த கணக்குகளில் ரூபா 421,373 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நன்கொடையாக கிடைத்த ரூபா 221,373 தொகையான கம்பெக்டர் வாகனம் மதிப்பீடு செய்யும் போது ரூபா 5,800,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (iv) | 2018 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 682,131 தொகையான கணக்காய்வு கட்டணம் மீளாய்வாண்டின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | வழுவொன்று ஏற்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (v) | ஆண்டின் இறுதி இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 7,649,976 தொகையான புத்தகப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | களஞ்சியத்தின் இருப்பு மீதி ரூபா 7,549,375 ஆகவும், களஞ்சிய இருப்பில் ஆயுர்வேத இருப்பும் சேர்க்கப்பட்டு ரூபா 7,649,976 தொகையாக இருந்ததை அறியத்தருகின்றோம். |
| (vi) | மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 152,671 தொகையான ஊழியர் கடன் வட்டி ஊழியர் கடன் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மோட்டார் வாகனமும் வண்டியும் | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து | புதிய வாகன மதிப்பீட்டின் பிரகாரம் மீதி ரூபா 51,356,829 ஆகவும், |

| | | |
|---|---|---|
| கணக்கின் மீதி ரூபா 57,135,411 ஆக இருந்த போதும் அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 51,356,829 ஆக இருந்தமையால் ரூபா 5,778,582 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மோட்டார் சைக்கிளின் பெறுமதி சேர் வரி (VAT) பெறுமதி ரூபா 21,418 தொகை குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட பட்டோலைகள் மற்றும் மெய்மெய்யாய்வு அறிக்கை காணப்படாமையினால் ரூபா 22,671,427 கூட்டுத் தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டம் | | | | |
| (i) 164(2) ஆம் பிரிவு | | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா சபைகள் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் சுற்றுலா சபையில் அங்கீகரிக்கப்பட்ட 02 ஹோட்டல்களில் இருந்து அனுமதிப் பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள நிறுவனங்களில் இருந்து வரி அறவிடப்பட வேண்டும். | ஒரு நிறுவனம் சுற்றுலா சபையின் வரி செலுத்தாதிருந்ததுடன், ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 165(ஈ) ஆம் பிரிவு | 553,600 | தனியார் நிறுவனம் ஒன்றினால் நிவ் லீட்ஸ் வீதியில் நில வரைபட இலக்கம் 3750 இற்குரிய காணியை ஏலத்தில் விற்பனை செய்யும் போது ஒரு சதவீத வரித் தொகை பெறப்பட்டிருக்கவில்லை. | விற்பனை விலையில் 01 சதவீத வரி தொகை அறவிடப்பட வேண்டும். | பணம் செலுத்துவதற்கு காலம் கோரப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (iii) | 170(2) ஆம் பிரிவு | | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதி கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களை தடை செய்து நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். | | 14 வியாபார நிறுவனங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்களுக்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | - | சபையின் 21 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 7,469,855 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,657,789 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 44,701,000 | 49,240,528 | 48,011,856 | 20,014,097 | 45,200,000 | 47,666,748 | 35,586,717 | 18,851,021 |
| (ii) | வாடகை | 8,516,000 | 5,017,916 | 1,385,391 | 3,632,525 | 5,305,000 | 5,289,224 | 1,568,451 | 3,720,773 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,193,000 | 386,000 | 386,000 | - | 350,000 | 506,478 | 506,478 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 45,802,000 | 38,000,000 | - | 70,502,070 | 55,000,000 | 55,000,000 | - | 147,218,030 |
| | | 101,212,000 | 92,644,444 | 49,783,247 | 94,148,692 | 105,855,000 | 108,462,450 | 37,661,646 | 169,789,824 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) வீத வரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த ஆதன வரி நிலுவை ரூபா 19,896,000 ஆக இருந்ததுடன், அந்த மீதியில் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 1,645,413 தொகையும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,314,792 தொகையும் காணப்பட்டது. | நீண்ட காலமாக நிலுவையை அறவிடுவதற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நாட்டில் காணப்படுகின்ற தற்போதைய நிலைமையின் அடிப்படையில் நிலுவை வருமானத்தை அறவிடுவதில் தாமதம் காணப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

(ஆ) கைத்தொழில் மற்றும் வியாபார வரி

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 65,840 தொகையான கைத்தொழில் மற்றும் வியாபார வரிக் கணக்கின் நிலுவை மீதி ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரி அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அறவிடல் தொடர்பான அறிக்கை காணப்படாமை மற்றும் நீதிமன்றத்தில் பூச்சிய மீதி காணப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வியாபார நிலைய வாடகை<br>----------------------------------------------- | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 3,819,290 தொகையான வியாபார நிலைய வாடகை நிலுவை மீதியில் ரூபா 333,410 தொகை மாத்திரம் 2020 யூன் 30 ஆம் திகதியில் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையில் 2020 யூலை 03 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 3,483,881 ஆக இருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 4,680,000 தொகையான வியாபார நிலைய வாடகை சிட்டையிடல்களில் 2020 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 3,565,484 தொகை அதாவது 76 சதவீதம் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | வருடாந்த சிட்டையிடல்களில் 2020 யூலை 03 இல் உள்ளவாறு ரூபா 3,565,484 தொகை அறவிட வேண்டியதாக காணப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | முச்சக்கர வண்டி கட்டணம் அறவிடல்<br>------------------------------------------------------ | | |
| | 2019 ஆம் ஆண்டின் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வாகன தரிப்பிடங்களில் 679 முச்சக்கரவண்டிகள் உள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 300 முச்சக்கரவண்டிகளுக்கு மாத்திரம் அனுமதிப் பத்திரம் விநியோகிகப்பட்டிருந்தமையால் அனுமதியின்றி சபை வாகன தரிப்பிடங்களில் காணப்படுகின்ற 379 முச்சக்கரவண்டிகளில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 379,000 வருமானம் ஒன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | சபை வாகனத் தரிப்பிடங்களில் காணப்படுகின்ற சகல முச்சக்கரவண்டிகளில் இருந்தும் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | சபை தீர்மானத்தின் அடிப்படையில் 379 முச்சக்கரவண்டிகளுக்காக அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்ததுடன், காணப்படுகின்ற முச்சக்கரவண்டிகளுக்கு உப விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டு புதிய உப விதியொன்றை விதிப்பதுடன், 2019 செப்தெம்பர் 05 ஆம் திகதிய சபை தீர்மானத்தின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படும் என அறியத்தருகின்றோம். |
| (உ) | ஏலமிடப்பட்ட காணிகளில் வரி அறவிடல்<br>------------------------------------------------- | | |
| | சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட 04 காணி ஏல விற்பனைகளில் ரூபா 1,854,568 தொகையொன்று வரியாக அறவிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக காணிகளின் விற்பனைப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விற்பனைப் பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்பட வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் உரித்துறுதியின் பிரதி பரீட்சிக்கப்பட்டு நிலுவை பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 70,502,070 ஆகும். | நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இந்த கட்டணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| | 2019 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும், அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படும் முறை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்திக் கொள்ளும் முறை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக இனங்காணல்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டிற்காக சரியாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | சபையினால் 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அவை ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சமூக சபைகளை ஸ்தாபித்தல். | | |
| 19 கிராம சேவகர் பிரிவுகளுக்காக சமூக சபைகள் 01 மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், சபையின் சமூக சேவைப் பிரிவின் பங்களிப்பின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் போது 17 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. | சமூக சேவை பிரிவின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்ற வேண்டும். | நிரந்தர சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் அந்த பிரிவின் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள முடியாதிருந்தது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) செயற்பாடற்ற நிலையில் காணப்படுகின்ற பொதுச் சந்தைக் கட்டிடம். | | |
| 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்ட 25,830 சதுர அடி பரப்பளவையுடைய பொதுச் சந்தையின் கட்டிட தொகுதி தொடர்பாக 2016 ஆகஸ்ட் 24 ஆம் திகதி தேசிய கட்டிடங்கள் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கட்டிடத்தின் கொங்கிரீட் கட்டமைப்பு துருப்பிடித்திருந்தமையினால் பழுதுபார்த்தல் ஆக்கபூர்வமாக இல்லாதிருந்தமை மற்றும் கட்டிடத்தை பயன்படுத்துபவர்களுக்கு விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலைமைகள் உள்ளதாகவும், உடைத்து அகற்றுமாறும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2020 மே மாதம் வரையும் இந்த கட்டிடம் உடைத்து அகற்றப்படாமல் வியாபார கடைகள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. மேலும், 2017 யூலை 04 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற கணக்குகள் செயற்குழுவின் போது இந்த விடயங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அனுப்புமாறு கட்டளை இடப்பட்ட போதும் அந்த கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விரைவாக செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்காலிக வியாபார கொட்டகைகள் நிர்மாணிக்கப்பட்டு பழைய கட்டிடத்தில் உள்ள வியாபாரிகள் அந்த சூழலில் இருந்து அகற்றுவதற்கும் விபத்துக்கள் நேரிடக் கூடிய கட்டிடத்திலிருந்து அகற்றுவதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| (i) | செயலாளர் பதவியின் பதிற்கடமைக்காக முகாமைத்துவ உதவியாளர் சிரேஷ்ட தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) | கணக்காளர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் நூலகர் பதவிகளிலும், தொழில்நுட்ப உதவியாளர் பதவியும், முகாமைத்துவ உதவியாளர் பதவியும் மற்றும் 03 வருமான பரிசோதகர் பதவியும், முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவியும், வேலைக்கள பரிசோதகர் பரிசோதகர் பதவியும், இரண்டு சாரதிகள் பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 14 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். ஆரம்ப பதவிகளை ஆட்சேர்ப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | சம்பளமற்ற விடுமுறை | | |
| | 2019 ஆம் ஆண்டில் 15 ஊழியர்கள் 830 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றிருந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ச்சியாக சம்பளமற்ற விடுமுறைகள் பெற்ற ஊழியர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வாகன பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் உடைந்த நிலையில் காணப்படுகின்ற 05 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விற்றுத் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |